# தமிழ் வரிவடிவச் சீரமைப்பு

Prof. V. C. Kulandai Swamy
Former Vice-Chancellor,
Indra Gandhi National Open University, India

---

## 1. எழுத்துகளைக் குறைப்பதன்று

தமிழ் வரிவடிச் சீரமைப்பு என்னும் பொழுது நாம் ஒரு கருத்தை வலியுறுத்த வேண்டும். நெடுங்கணக்கில் உள்ள 247 ஒலியெழுத்துகளில் ஒன்றையும் குறைப்பதல்ல. அவற்றை எழுதுவதற்காகக் குழந்தைகள், மற்றைய கற்போர் மனப்பாடம் செய்ய வேண்டிய குறியீடுகளை மட்டும் குறைப்பதாகும். பெரியார் நூற்றாண்டின் பொழுது செய்யப்பட்ட சீர்திருத்தத்திறகுப் பின் இப்போதிருக்கும் தமிழ் வரிவடிவத்திற்கு 107 குறியீடுகள் தேவைப்பதவைதானா? தவிர்க்க முடியாதததா? தவிர்க்க முயன்றால் அதன் வழி தமிழுக்குப் பெரிய தீங்கு வந்து விடுமா என்ற கேள்விகள் எழுவது இயல்பு.

அட்டவனை - 1


தமிழுக்குக் கையெழுத்தில் தேவைப்படும் குறியீடுகள் பற்றிய விவரம் பற்றிய விவரம்

| | ஓலிகள் | எழுத்துகள் | குறியீடுகள் |
|---|---|---|---|
| 1. உயிர் | 12 | 12 | 11<br>(ஔ-கூட்டுக் குறியீடு) |
| 2. ஆய்தம் | 1 | 1 | 1 |
| 3. தனி மெய் | 18 | 18 | 18 + புள்ளி 1 |
| 4a. உயிர்மெய்<br>(அகர வரிசை) | கூட்டொலிகள் | 18 | - |
| 4b. உயிர்மெய்<br>(ஆ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ வரிசைகள்) | கூட்டொலிகள் | 126 | 4 (ா,ெ,ே,ை) |
| 5. உயிரமெய்<br>(இ,ஈ,உ,ஊ வரிசைகள்) | கூட்டொலிகள | 72 | 72 |
| | | 247 | 107 |

## 2. நான்கு குறியீடுகள் போதும்

நாம் மேலே குறுப்பிட்ட நான்கு உயிர் மெய் வரிசைகளைத் தவிர மீதமிருக்கும் உயிர் மெய் எழுத்துகள் அனைத்திற்கும் (ா, ெ, ே, ை, ள) போன்ற குறியீடுகளை மட்டும் உயிர் மெய் அகரத்திற்கு வலது புறத்திலோ (கா, சா, ....னா) இடது புறத்திலோ (கெ, செ,...னெ) அல்லது இரு புறத்திலுமோ (கொ, சொ, ...னொ) பயன்படுத்துகிறோம். ஆனால் (கி, கீ, கு, கூ) உயிர் மெய்களில் மட்டும் உயிர்க் குறியீடுகள் உயிர் மெய் அகரத்திற்கு வலது புறத்திலோ, இடது புறத்திலோ தனியாக வராமல் எழுத்தோடு ஒன்றி நிற்கின்றன. இந்த நான்கு வரிசைகள் மட்டும



மற்ற ஏழு உயிர் மெய் வரிசைகள் இரு இணைகோடுகட்குள் அடங்க இவற்றுக்கு மேல் ஒரு மாடி, கீழ் ஒரு மாடி இடம் தேவைப்படுகிறது. (படம் - 1)




(படம் - 1)

இந்த நான்கு வரிசைகட்கும், மற்ற ஏழு வரிசைகளைப் போலவே தனிக் குறியீடுகளைப் பயன்படுத்துவது என்று வைத்துக் கொண்டால், இவற்றிலுள்ள 72 ஒலியெழுத்துகட்கு நான்கு குறியீடுகள் மட்டுமே தேவைப்படும். குழந்தைகள் 72 எழுத்துகட்குப் பதிலாக நான்கு குறியீடுகளை மட்டும் கற்க வேண்டும். கொள்கையளவில் இது ஒப்புக் கொள்ளப்பட்டால் குறியீடுகளைத் தேர்வு செய்வது பெரிய பிரச்சினையாக இராது. உயிர் இகர, ஈகாரத்திற்கு இப்பொழுது எழுத்துக்கு மேல் பயன் படுத்துவதையொத்த குறியீடுகளையே வலது புறத்தில் பயன்படுத்தலாம். உயிர் மெய் உகரம், ஊகாரம் இவற்றிற்கு நாம் கிரந்த எழுத்துகட்குப் பயன்படுத்தும் குறியீடுகளை ஒத்தவற்றை, தமிழ் வரிவடிவத்தின் இயற்கைக்கு ஏற்பவும், பார்வைக்கு ஏற்புடையதாக இருக்கும் வகையிலும் (படம் - 2) பயன்படுத்தக்கூடும். இப்படி ஒரு முடிவு செய்வதாக வைத்துக் கொண்டால், கீழ்க்கண்ட நான்கு குறியீடுகளைக் (அட்டவணை - 2) குழந்தைகள் கற்றால் 72 ஓலி எழுத்துகளையும் எழுத்துகளையும் எழுத இயலும்.

## அட்டவணை - 2

| | |
|---|---|
| இகரம் |  |
| ஈகாரம் |  |
| உகரம் |  |
| ஊகாரம் |  |


(படம் - 2)


இந்த நான்கு குறியீடுகளை ஏற்றுப் பயன்படுத்தினால் 247 ஓலி எழுத்துகளைக் கொண்ட தமிழ் நெடுங்கணக்கை எழுதவும் படிக்கவும் தேவையான குறியீடுகள் 107 க்குப் பதிலாக 39 மட்டுமே. அவை அட்டவணை - 3 இல் கொடுக்கப்பட்டுள்ளன. அட்டவணை - 2 இல் குறிப்பட்ட குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்ட உயிர்மெய் இகரம், ஈகாரம், உயிர் மெய் உகரம் ஊகாரம் வரிசைகள் படம் - 2 இல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

# அட்டவணை - 3

## முதன்மை எழுத்துக்கள்      உயிர் மெய்க் குறியீடுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | ஒ | ஃ |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஓ | ஐ |
| க | ச | ட | த | ப | ற |
| ங | ஞ | ண | ந | ம | ன |
| ய | ர | ல | வ | ழ | ள |





படம் -2

### 3. குறியீடுகளின் வடிவம்

இங்கு இப்பொழுது முக்கியமானது இந்த நான்கு குறியீடுகளைப் பயன்படுத்தலாம் என்ற கொள்கையை ஒப்புவது தான். குறியீடுகளின் வடிவம் அடிப்படைப் பிரச்சினை அன்று. அதை ஒரு சில அறிஞர்களைக் கலந்து அரசு முடிவு செய்யலாம். கணிப்பொறியில் பல குறியீடுகளை உருவாக்கி அவற்றுள் தமிழ் வடிவத்திற்கு இயைபுடையதான, எழில் சேர்ப்பதான ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.

### 4. அறிஞர்கள் ஒப்பியது

நாம் கூறியிருக்கும் மாற்றங்களில் புதியது எதுவுமில்லை. இந்த நான்கு வரிசைகட்கும் தனிக் குறியீடுகளைப் பயன்படுத்தலாம்; பயன்படுத்த வேண்டும்; என்பது ஏறத்தாழ 60 ஆண்டுகாலமாக வலுயுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. பேரா. தெ. பொ. மூ., பேரா. மு. வ., திரு. கி. வா. ஜ., புலவர் குழந்தை போன்ற, துறை போகக் கற்ற தமிழறிஞர்கள் பரிந்துரைத்திருக்கின்றனர். சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ஆரம்பத்தில் எதிர்த்தாலும், 13.3.89 செங்கோலில் சீரமைப்பை ஏற்று

எழுதியிருக்கிறார். பே.ரா. வ.சு.ப. மாணிக்கம் பின்னர் எதிர்த்தார் எனினும் எழுத்துச் சீரமைப்பை ஆதரித்து, உகர, ஊகார உயிர் மெய் எழுத்துகளுக்கு அவர் பரிந்துரைக்கும் குறியீடுகளையும் காட்டி டாக்டர் கொடுமுடி சண்முகனுக்கு எழுதிய கடிதம் நூல்களில் பதிப்பாகி இருக்கிறது. தி.மு.க. வின் 1977 தேர்தல் பிரகடனம் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பேசுகிறது. டாக்டர் கலைஞர், தாம் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொள்கையளவில் ஏற்பதாகவும் அறிஞர்களுடன் கலந்து முறையாகச் செய்ய வேண்டுமென்பதே தம் கருத்து என்றும் முரசொலியில் எழுதியுள்ளார். கல்வியாளர்களும், தமிழ் அறிஞர் பலரும் ஏற்ற ஒரு சீர்திருத்தம் இவ்வளவு காலம் செயற்படுத்தப்படாதிருப்பதும் ஒரு புதிர் தான்.

## 5. வாழ்வு காலத்தால் ஆனது

மனித உடல் வேண்டுமானால் ஊனாலும், நாராலும், என்பாலும் ஆனதாக இருக்கலாம். ஆனால் வாழ்வு காலத்தால் ஆனது. விரைவும், வறுவிறுப்பும் இன்று ஒரு இனத்தின் வாழ்வுக்கு உயிர் நாடி. மேலாண்மைத் துறை நிபுணரான பீட்டர் ட்ருக்கர் விரைவு குன்றிய, விரைவில் செயல்பட இயலாத எந்த இனமும் நாளா வட்டத்தில் நசிந்துவிடும் என்கிறார். இன்று ஒரு நாட்டின் வாழ்வும் வளமும் அதன் கல்வி நிலையைப் பொறுத்தது. கல்விக்கு முதற்படி மொழிக் கல்வி. தாய் மொழி எல்லோரும் தலைமுறை தலைமுறையாகக் கற்க வேண்டிய ஒன்று. மொழியைக் கற்பது எளிதாக்கப்பட வேண்டும். எவ்வளவு விரைவில் கற்க முடியுமோ அவ்வளவு விரைவில் கற்பது நலம். எதிர் காலத் தமிழ் மக்கள் நான்கு குறியீடுகள் மூலம் கற்கும் 72 எழுத்துகட்கு 72 குறியீடுகளை மனப்பாடம் செய்யச் சம்மதிக்க மாட்டார்கள். 39 குறியீடுகள் மூலம் கற்க இயலும் ஒரு வரி வடிவத்திற்கு 107 குறியீடுகளைக் கற்க வேண்டுவதை ஏற்க மாட்டார்கள். எனவே செய்யத்தக்க வென்று தெரிந்ததைத் தாமதிக்காது செய்ய வேண்டும்.

## 6. ஒரு மொழியினர்; பல நாட்டினர்

இன்று உலகு தழுவி வாழும் இனங்கள் ஐந்து; 1. யூதர் 2. ஆங்கில மொழியினர் 3. சீனர் 4. ஜப்பானியர் 5. இந்தியர். இந்தியர்களில் தமிழர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். உலகின் இரண்டு நாடுகளில் தேசிய மொழியாக இருக்கும் பெருமை, இந்திய மொழிகளில் தமிழுக்கு மட்டுமே உண்டு. தமிழர்கள் பார் முழுதும் பரந்து வாழ்கின்றனர். தமிழர் ஒரு மொழியினர் ; பல நாட்டினர். எல்லா நாட்டிலும் சிறுபான்மையர். தமிழினம் ஆலமரம் போன்றது. அடிமரம் தமிழகத் தமிழர் என்றால், மற்ற நாட்டினர் விழுதுகள். தமிழினம் என்ற ஆலுக்கு விழுதின் வலிமை மிக முக்கியம். விழுதுகள் வலிமையுள்ளதாக இருக்க வேண்டுமாயின் அயலகத் தமிழர்கள் தமிழ் மொழியோடு தொடர்புள்ளவர்களாக வாழ வேண்டும். அவர்கள் தமிழ் கற்க வேண்டும். அதற்குத் தமிழ் கற்பது எளிதாக்கப்பட வேண்டும். ஒரு மொழி பொருளாதாரத் தேவையாக இல்லாவிட்டால் இளைஞர் தலைமுறை எளிதில் அதைக் கற்க முன்வராது. இந்தியத் துணைக் கண்டத்திற்குள்ளேயே மற்ற மாநிலங்களில் வாழ்பவர்கள் தமிழை மறந்து விடுகிறார்கள். பொதுவாகத் தமிழ் கற்பது எளிதாக்கப்பட வேண்டும், அதற்கு முதற்படியாக, தமிழ் வரிவடிவம் எளிதாக்கப்பட வேண்டும். எளிதாக்கப்படுவது இயலும். வரிவடிவம் கடினமாக இருக்குமாயின் ஆரம்பமே அதைரியப்படுத்துவதாக அமைந்து விடும். இது விரும்பத்தக்கதன்று.


## 7. பிற மொழியினர் செய்துள்ளனர்

மலையாள மொழியை எழுதுவதற்கு, முன்பு நானூறுக்கு மேற்பட்ட குறியடுகள் தேவைப்பட்டன. 1967இல் அமைந்த திரு.பீ.என்.குஞ்சன் பிள்ளை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆரவாரமின்றி, அமைதியாக, தொண்ணூறுக்குப் பக்கமாக இருக்கும் படி குறைத்து

விட்டார்கள். ஜப்பானிய மொழி பழமையானது. வலது புறத்தில் தொடங்கி, மேலிருந்து கீழாக செங்குத்து வரிசையில் எழுதி வந்தார்கள். ஆனால் அறிவியல் தொழில் நுட்ப்ப் பாடங்களின் தேவை கருதிப் படுக்கையாக இடது புறம் இருந்து எழுதுகிறார்கள் இது மகத்தான மாற்றம். சீனாவில் பொதுவுடமை அரசு அமைந்த பின் செய்த முதல் வேலைகளில் ஒன்று மொழிச் சீர்திருத்தக் குழு அமைத்ததும், பத்தாயிரத்திற்கும் அதிகமாகத் தேவைப்பட்ட எழுத்துக்களை 2236 க்குக் குறைத்ததுமாகும். பண்டை மொழியினரும் செய்திருக்கிறார்கள். அண்மைக்கால மொழியினரும் செய்திருக்காறார்கள். வளரும் காலத்தில் வலிமை குறையாது நிலைத்து நிற்க மாற்றங்களை ஏற்றேயாக வேண்டும்.

## 8. வரிவடிவம் மாறிவந்த ஒன்று

தமிழ் வரிவடிவம் ஏதோ தொல்காப்பியர் காலத்தலிருந்து நிலைத்து நிற்கும் ஒன்றன்று. வள்ளுவரும் இளங்கோவும் எழுதிய வரிவடிவத்தில் ( படம்- 3.1 & 3.2) ஓர் எழுத்தும் நமக்குப் புரியாது. இன்று நாம் எழுதும் வரிவடிவத்திலும் அவர்கட்கு ஓர் எழுத்தும் புரியாது. அவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ் மொழியின் அடிப்படையும் அடையாளமும் மாறவில்லை. மொழிக்கு ஒலி தான் அடிப்படை. வரிவடிவம் ஒலிக்கு நாம் கொடுக்கும் குறியீடு. வரிவடிவ மாற்றத்தால் மொழி அணுவளவும் பாதிக்கப்படுவதில்லை. நாம் புரிந்து கொள்ள இயலாத சுருக்கெழுத்தில் ( Short hand) எழுதப்படும் தமிழும் நாம் எழுதும், பேசும் தமிழ் தான். வரிவடிவமே மொழி அன்று.



படம் - 3.1



(படம் - 3.2)

## 9. சோதனைக்காலம்

தமிழ் மொழி தனது மேடும் பள்ளமும் நிறைந்த நீண்ட வாழ்வில் பல சோதனைகளைச் சந்தித்திருக்கிறது. கண்டங்களைக் கண்டிருக்கிறது. ஆனால் இன்றைய நிலை வேறு. நாம் வாழ்வது கல்வியுகம். அறிவியலும், தொழில் நுட்பமும் ஆட்சி செய்யும் காலம். 19- ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட போக்குவரத்துப் புரட்சியும் 20- ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தகவல் தொழில்நுட்பப்புரட்சியும் பரந்து விரிந்த உலகை ஒரு 'வையச் சிற்றூர்' ( Global Village ) என்று

கூறும் அளவிற்குச் சுருக்கி விட்டன. இந்தச் சூழ்நிலை வலியவர் மொழியும் பண்பும் வளரவும், மெலியவர் மொழியும் பண்பும் தேயவும் துணை நிற்கிறது. சிறுபான்மை எதுவாயினும் பெரும்பான்மையில் கரைந்து மறையும் கால கட்டத்தில் இருக்கிறோம். இருப்பதை இறுக்கிப் பிடிப்பது மட்டும் போதாது. சற்று இளக்கம் (Flexibility ) தேவை. காலத்திற்கேற்ற வளர்ச்சி தேவை. வளர்ச்சிக்கு மாற்றங்கள் தேவை.